**செ. கு. எண்**: 297 **நாள்**: 21.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.8.2012

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பண்ணைக்காடு கிராமத்தில் 15.8.2012 அன்று சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த என்.பஞ்சம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி என்பவரின் மகன் திரு. ஆப்ரகாம் மீது அரசு பேருந்து மோதியதில் அவர் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், நக்கலம்பட்டி கிராமம், மதுரை – தேனி தேசிய நெடுஞ்சாலையில் 16.8.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த உசிலம்பட்டி வட்டம், மலைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் திரு. ஜெயக்குமார் படுகாயமடைந்து அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பனையூர் கிராமம், குடிமியான் தோப்பு கிழக்கு கடற்கரை சாலையில் 18.8.2012 அன்று நடந்து சென்று சென்று கொண்டிருந்த நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், திருவிடைக்காணி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு. மகாலிங்கம் மீது அரசு பேருந்து மோதியதில் அவர் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், புனித தோமையர் மலை மெட்ரோ ரெயில் பணியில் 19.8.2012 அன்று ஈடுபட்டிருந்த திரு. மங்கல் முண்டா என்பவரின் மகன் கங்காதரன் முன்டா மீது அரசு பேருந்து மோதியதில் அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. ஆப்ரகாம், திரு. ஜெயக்குமார், திரு. மகாலிங்கம் மற்றும் திரு. கங்காதரன் முன்டா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் காலமான திரு. ஆப்ரகாம், திரு. ஜெயக்குமார், திரு. மகாலிங்கம் மற்றும் திரு. கங்காதரன் முன்டா ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**